# துறைமுகம் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சு

## திட்ட முகாமைத்துவ பிரிவு

## பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய அபிவிருத்தித் திட்டம் கட்டம் II – நிலை 2

# வெற்றிடங்கள் (ஒப்பந்த அடிப்படை)

BIA அபிவிருத்தித் திட்டமானது விமான போக்குவரத்துத் தொழில்துறையின் அதிகரிக்கும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வசதிகளை மாற்றியமைத்தல் மற்றும் விரிவுபடுத்தலை நோக்காகக் கொண்ட முக்கியத்துவம் வாய்ந்த முன்முயற்சி ஒன்றாகும். ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தினால் (JICA) நிதியளிக்கப்பட்ட இந்தத் திட்டத்தில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மற்றும் அதிநவீன வசதிகளைக் கொண்ட, சமீபத்திய தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய புதிய முனையக் கட்டிடத்தை நிர்மாணிப்பதும் உள்ளடங்கும். இத்திட்டமானது முனையக் கட்டிடத்தை மட்டும் உள்ளடக்காமல், ஜப்பானிய பொறியியல் ஆலோசனை நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இயந்திரவியல், மின்சாரம் மற்றும் குழாயமைப்பு (MEP), தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் சிவில் பொறியியல் நிர்மாணப் பணிகள் உள்ளிட்ட அதனுடன் தொடர்புடைய அனைத்து வகையான பணிகளையும் உள்ளடக்கியதாகும்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 2026.03.28 ஆம் திகதிய 2/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி கட்டுநாயக்க, BIA இல் மேலுள்ள திட்டத்திற்காக, பின்வரும் பதவி நிலைகளுக்காக தகுதி பெற்ற, துடிப்பான இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1. திட்டப் பணிப்பாளர் - பதவி 01

**தகைமைகள்:** (கீழுள்ள i அல்லது ii)

i. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணி பட்டம் ஒன்று.

**மற்றும்**

தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் (முதுமாணி)/ தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பு ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ இதணையொத்த தொழில்முறை தகைமை ஒன்று.

**அத்துடன்**

முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 12 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம், அதில் 06 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

ii. தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பு ஒன்றில் இருந்து பெறப்பட்ட நிறுவன/ சக அங்கத்துவம்.

**அத்துடன்**

முகாமைத்துவ மட்டத்தில் தொடர்புடைய துறையில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவம், அதில் 06 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்: பிரிவு - A** - ரூபா 400,000/- மற்றும் அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்

### 2. திட்ட ஒப்பந்த நிபுணர் - பதவி 01

**தகைமைகள்**: (கீழுள்ள i அல்லது ii)

i. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் துறையில் இளமாணி பட்டம்

**மற்றும்**

தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் (முதுமாணி)/ தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பு ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம் அல்லது இதனையொத்த தொழில்முறை தகைமை ஒன்று.

**அத்துடன்**

முகாமைத்துவ மட்டத்தில் தொடர்புடைய துறையில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவம்.

ii. அகில இலங்கை அரச சேவை ஒன்றின் வகுப்பு I அதிகாரி அல்லது தொடர்புடைய துறையில் அதனையொத்த அந்தஸ்த்து

**மற்றும்**

தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்ட (முதுமாணி) தகைமை.

**அத்துடன்**

வகுப்பு I பதவியில் குறைந்தது 03 ஆண்டுகள் அனுபவம் அல்லது தொடர்புடைய துறையில் அதனையொத்த அந்தஸ்த்து

**சம்பளம்: பிரிவு C** (சிறப்புப் பிரிவு) - ரூபா 305,000/-

**அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்**

### 3. சிவில் பொறியியலாளர் - பதவி 02

### 4. மின் பொறியியலாளர் - பதவி 01

### 5. மின்னணு பொறியியலாளர் - பதவி 01

### 6. பொறிமுறை பொறியியலாளர் - பதவி 01

**தகைமைகள்: (கீழுள்ள i அல்லது ii)**

i. தொடர்புடைய துறையில் பட்டம் ஒன்றுக்கு இணையான தகைமை ஒன்றாக ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டம்/ தகைமை ஒன்று

**மற்றும்**

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பு ஒன்றில் இருந்து பெற்றப்பட்ட இணை அங்கத்துவம்/ இதனையொத்த தொழில்முறை தகைமை ஒன்று

**அத்துடன்**

தொடர்புடைய துறையில் குறைந்தது 07 ஆண்டுகள் அனுபவம்.

ii. அகில இலங்கை அரச சேவை ஒன்றின் வகுப்பு II/III அதிகாரி அல்லது தொடர்புடைய துறையில் அதனையொத்த அந்தஸ்த்து

**மற்றும்**

வகுப்பு II/III பதவியில் குறைந்தது 07 ஆண்டுகள் அனுபவம் அல்லது தொடர்புடைய துறையில் அதனையொத்த அந்தஸ்த்து

**சம்பளம்: பிரிவு - D** - ரூபா 260,000/- மற்றும் அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்

### 7. திட்ட கணக்காளர் - பதவி 01

### 8. திட்ட உள்ளக கணக்காய்வாளர் - பதவி 01

**தகைமைகள்:** (கீழுள்ள i, ii அல்லது iii)

i. தொடர்புடைய துறையில் பட்டம் ஒன்றுக்கு இணையான தகைமை ஒன்றாக ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டம்/ தகைமை ஒன்று

**மற்றும்**

உரிமதாரர் II இடைநிலை பரீட்சையில் சித்தி/ கணக்கியல் மற்றும் வர்த்தகம்/ வர்த்தகத் தர பரீட்சை/ நிறுவன தர பரீட்சை அல்லது பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் உயர் பரீட்சையில் II ஆம் நிலைச் சான்றிதழ் அல்லது துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பு ஒன்றில் இருந்து இதனையொத்த தொழில்முறை தகைமை ஒன்று.

**அத்துடன்**

ii. தொடர்புடைய துறையில் குறைந்தது 07 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பு ஒன்றில் இருந்து பெற்றப்பட்ட இணை அங்கத்துவம்/ இதனையொத்த தொழில்முறை தகைமை ஒன்று

**அத்துடன்**

தொடர்புடைய துறையில் குறைந்தது 4 ஆண்டுகள் அனுபவம்

iii. அகில இலங்கை அரச சேவை ஒன்றின் வகுப்பு II/III அதிகாரி அல்லது தொடர்புடைய துறையில் இதனையொத்த அந்தஸ்த்து

**அத்துடன்**

வகுப்பு II/III பதவியில் குறைந்தது 07 ஆண்டுகள் அனுபவம் அல்லது தொடர்புடைய துறையில் அதனையொத்த அந்தஸ்த்து

**சம்பளம்: பிரிவு – D-1** - ரூபா 260,000/- மற்றும் அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்

### 9. கணக்கு உதவியாளர் - பதவி 01

**தகைமைகள்**: (கீழுள்ள i அல்லது iii)

i. தொடர்புடைய துறையில் பட்டம் ஒன்றுக்கு இணையான தகைமை ஒன்றாக ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டம்/ தகைமை ஒன்று

**அல்லது**

பதவியின் தொழில்நுட்ப துறைக்கு தொடர்புடைய மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட NVQ தரம் 7 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்று

**மற்றும்**

தேவையான சிறப்புத் துறையில் குறைந்தது 03 ஆண்டுகள் அனுபவம்

ii. பதவியின் தொழில்நுட்ப துறைக்கு தொடர்புடைய மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட NVQ தரம் 6 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்று

**மற்றும்**

தேவையான சிறப்பு துறையில் குறைந்தது 06 ஆண்டுகள் அனுபவம்

iii. பதவியின் தொழில்நுட்ப துறைக்கு தொடர்புடைய மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட ரேஞு தரம் 5 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்று

**மற்றும்**

தேவையான சிறப்பு துறையில் குறைந்தது 09 ஆண்டுகள் அனுபவம்

**சம்பளம்: பிரிவு – F** - ரூபா 160,000/- மற்றும் அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்

### 0. சுருக்கெழுத்து எழுதுவினைஞர் - பதவிகள் 03

**தகைமைகள்:** (கீழுள்ள i அல்லது iii)

i. க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

ii. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், ஆங்கில மொழிகள், கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

### 11. அலுவலக உதவியாளர் - பதவிகள் 03

**தகைமைகள்:** (கீழுள்ள i அல்லது iii)

i. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், உட்பட குறைந்தது இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

ii. கணினி அறிவு மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவராக அனுபம் மேலதிக தகைமை ஒன்றாகும்.

iii. கம்பஹா மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சம்பளம்:**

பதவி நிலைகள் 01 தொடக்கம் 09 வரை 2026.03.28 ஆம் திகதி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (MSD) சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும் உரித்துடையதாகும்.

பதவி நிலைகள் 10 மற்றும் 11 இற்கான சம்பளம் 02/2026 ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்திற்கு அமைய உரித்துடையது மற்றும் முறையே பொது நிர்வாக சம்பள அளவு MN-2 தரம் II மற்றும் PL-2 தரம் III மற்றும் ஆரம்பப் படியில் 50% கொடுப்பனவு மற்றும் மேலுள்ள சுற்றுநிருபத்தின்படி அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும்.

**வயது:**

1, 2, 3, 4, 5, 6, 7, 8 மற்றும் 9 பதவிகளுக்காக விண்ணப்ப இறுதித் திகதிக்கு 64 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

10 மற்றும் 11 பதவிகளுக்காக விண்ணப்ப இறுதித் திகதிக்கு 45 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

**விரும்பத்தக்க கூடுதல் அனுபவம்/ தகைமை**

பின்வருவனவற்றை பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

- வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களில் அனுபம்.
- பதவி 2 இற்காக கோரிக்கைகளை ஆய்வு செய்தல், பதில்களைத் தயாரித்தல், ஒப்பந்த விதிமுறைகளை விளக்கிப் பொருள்கொள்ளுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகளில் திறன் பெற்றிருத்தல.
- அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றின் அங்கத்துவம்.
- Microsoft office packages உடன் பரீட்சயம் மற்றும் AutoCAD மற்றும் MS Project அல்லது பொறியியலாளர்களுக்கு இணையானதில் தேர்ச்சி
- பதவி 5 இற்காக கட்டுமானம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களில் IT, Electronics மற்றும் ELV இல் அனுபவம்.
- சர்வதேச விமானநிலை நிர்மாணத் திட்டங்களுடன் தொடர்புபட்ட அனுபவம்.

**பொதுவான விபரம்:**

- தொழில் வழங்குநர் சம்பளத்தில் EPF (ஊழியர் சேமலாப நிதியம்) இற்கு 8% பங்களிப்புச் செய்வதோடு ஊழியர் நீகு (ஊழியர் சேமலாப நிதியம்) இற்கு 12% பங்களிப்புச் செய்வார் என்பதோடு ETF (ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்) இற்கு 3% பங்களிப்புச் செய்வார்.

**பணி நியமன நிபந்தனைகள்**

திட்டப் பணியாளர்கள் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். அவர்களின் பணித் திறன் திருப்திகரமாக இருப்பதற்குட்பட்டு, ஒப்பந்தம் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படும்.

**பணியிடம்:**

**திட்ட முகாமத்துவ பிரிவு**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய அபிவிருத்தி**
**திட்டம் கட்டம் II – நிலை 2**
**மினுவன்கொட வீதி, நைகந்த**
**கட்டுநாயக்க**

**விண்ணப்பங்கள்:**

இரு உறவினர் அல்லாத நடுவர்களின் தொடர்பு விபரங்களுடன் கல்வி, தொழில்முறை தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் சேர்த்து சுயவிபரக் கோவையை வழங்கும் விண்ணப்பங்களை 2026 ஓகஸ்ட் 12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், துறைமுகம் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சு, இல 19, சைத்ய வீதி, கொழும்பு 01 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பத்திற்கு சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

பெண் அபேட்சகர்கள் விண்ணப்பிக்க ஊக்கப்பத்தப்படுகின்றனர்.

அரச/ அரச சார்புத் துறையைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

தகைமை மற்றும் அனுபவம் அடிப்படையில் குறுகிய பட்டியலில் சேர்க்கப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவர்.

**செயலாளர்**
**துறைமுகம் மற்றும் விமானசேவைகள் அமைச்சு**
**இல. 19, சைத்ய வீதி**
**கொழும்பு 01.**

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED